www.tamilarangam.net

"மாணவர் குரல்" பத்திரிகையை இம்முறை தாங்கள் பெற்றுக் கொண்டதைப்போன்று தொடர்ந்தும் பெறுவது நிச்சயமில்லை. எனவே தொடர்ந்து இதழ்களைப் பெற சந்தாதாரராகுங்கள்.

# மாணவர் குரல்

சந்தா விபரம்:

10 இதழ்கள் 10-00
5 இதழ்கள் 5-00

ஆசிரியர்,
மாணவர் குரல்
உரும்பராய் — இலங்கை

மாணவன் : 1 ஒக்டோபர் - நவம்பர் 1980 விலை : 75 சதம் குரல் : 3

# மாணவர் ஸ்தாபனங்கள் வளர்வது வரலாற்றின் இன்றைய தவிர்க்க முடியாத போக்கே!

இன்று நாடெங்கிலும் ஆங்காங்கே மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதும், தொடர்ந்து சில மாதங்களுக்கு பாடசாலைகளை மூடி வைப்பதன் மூலமோ சில வாக்குறுதிகள் மூலமோ அவை முடிவுக்கு கொண்டு வருவதும் சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன. ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு நமது நாட்டில் பரவலாக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்ற "கல்வி" காரணமாக இவற்றில் ஏற்படும் தாக்கங்கள் பெருமளவில் சமுதாயம் சார்ந்த பிரச்சினையாக மாற்றப்படும் அளவிற்கு முன் தள்ளப்படுகின்றது. இதிலும் குறிப்பாக தமிழ் மாணவர்கள் வரலாற்று ரீதியானதும், மற்றும் பல்வேறு காரணிகளினாலும் "கல்வி"யின் ஆதிக்கத்தினுள் அதிகம் தள்ளப்பட்டுள்ளனர். இவை காரணமாக மாணவர்களின் இன்றைய பங்கு நமது நாட்டில் குறிப்பாகத் தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும்.

அரசாங்க தொழில் வாய்ப்பை மட்டுமே கருத்திற் [illegible] கலைக் கழகத் தெரிவில் தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்டதின் விளைவாக உண்மையிலே பாதிக்கப்பட்ட மாணவர்களின் தொகை எண்ணிக்கையளவில் சிறிதாக இருந்தாலும் அதன் விளைவு சகல தமிழ் மக்களினதும் அபிலாசையின் வெளிப்பாடாக உருவாகி பின்னர் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் வாழ்வை நிர்ணயிக்கும் அளவிற்கு வளர்ந்ததென்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

எனவேதான் இன்று மாணவர்கள் வகுப்புப் பகிஸ்கரிப்புகளில் ஈடுபடும் போது பெற்றோர்களும் மற்றும் பகுதியினரும் இப்பிரச்சினைகள் பற்றி மிகவும் அக்கறை கொள்கின்றனர்.

இன்று பலரும் நடைமுறையிலுள்ள கல்வித் திட்டத்தையும் அவற்றின் கையாலாகாத்தனத்தையும் பல்வேறு கோணங்களில் இருந்து விமர்சிப்பதைப் பார்க்கலாம். இது தவிர்க்க முடியாததொன்று. எனினும் அதனை சரியான முறையில் வகுப்பதற்கான தன்மையை நாம் இன்றைய நிலையில் எதிர்பார்க்க முடியுமா என்பது ஒரு முக்கியமான விடயமாகும். இவ் விமர்சனங்களுக்கு மாறாக காலத்திற்குக் காலம் மேற்பூச்சாக சில மாற்றங்கள் புகுத்தப்படுவது போல் காண்பிக்கப் பட்டாலும் ஒரு முழுமையான மாற்றம் இச்சமூக அமைப்பில் எதிர்பார்க்கக் கூடிய தொன்றல்ல. எனவே வங்குரோத்து அடைந்துவிட்ட கல்வித் திட்டமும், அதன் விளைவாக தமிழ் மாணவர்கள் மீதான இன ரீதி[illegible] பாரபட்சமும் இன்று அவர்களை எதிர்கால நம்பிக்கையற்ற ஓர் சந்ததியாக உருவாக்கி வருகின்றது. இந்நிலையில் பல்வேறு சமூக பொருளாதார பலவீலக் காரணிகளின் பங்களிப்புக்கும், மாணவர்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் சீரழிந்த கலாச்சாரத்தின் ஆதிக்கத்திற்குள்ளும் அவர்கள் மூழ்கடிக்கப்பட்டு திக்கித் திணறுகின்றனர். இவற்றில் இருந்து அவர்களை மீட்டு ஓர் புதிய இலட்சிய வேட்கை கொண்ட மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்கான பணியை முன்னெடுக்கும் சக்திகள் இந்நாட்டில் பலவீனமுற்றிருக்கும் நிலையில் மாணவர்கள் மீதான பொறுப்பு மிகவும் அதிகமானதாக வுள்ளது.

பல்வேறு காரணிகளால் சுதந்திரமாக சிந்திக்கும் தன்மையையும், தமது ஆளுமைகளையும் இழந்த ஓர் மாணவர் சமுதாயம் உருவாகிக் கொண்டு வருகின்றது. இலவசக் கல்வி என்பதன் அர்த்தமே இல்லாமல் போய்விடுகின்றது. இந்நிலைமைகளை மாற்றியமைக்கவும் சீரழிந்த கலாச்சாரத்தின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடவும் மாணவர்கள் ஓர் பொறுப்புடன் ஸ்தாபன ரீதியான போராட்டத்தை நடாத்த வேண்டிய சுமை அவர்கள் மீது பெருமளவில் சுமத்தப்பட்டுள்ளது அவர்களை வழி நடாத்துவதற்கான சரியான மக்கள் நலன் அடிப்படையிலான ஸ்தாபனம் மக்கள் மத்தியில் இல்லாததின் காரணமாக மாணவர்களின் மீது இப்பொறுப்பு [illegible] பட்டுள்ளது. அன்று கிரேக்க ஞானி சோக்கரட்டீஸ் அறியாமை இருளில் அமிழ்ந்து இருந்த இளைஞர்களை நோக்கி எவ

K. ஸ்ரீதரன்
விரிவுரையாளர்
யாழ். பல்கலைக் கழகம்

ற்றையும் ஏன்? எதற்கு? என்ற வினாக்களைத் தொடுத்து அறிவைப் பெறச் சொன்னாரோ அதே கடப்பாட்டை இன்று தமிழ் மாணவர்கள் மிகவும் சிந்தித்து சந்தர்ப்பவாத அரசியல் மற்றும் சக்திகளின் வலைக்குள் வீழ்ந்து விடாது இருப்பதற்கான ஓர் தெளிவான சிந்தனையைப் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. குறுகிய தனிப் [illegible] அடிப்படைகளில் எழும் பிரச்சனைகளை இனங்கண்டு கொள்ளக் கூடிய சமூகப் பொறுப்பை தம் மத்தியில் மாணவர்கள் வளர்ப்பதற்கு சமூக உணர்வுள்ள ஆசிரியர்களினதும் மற்றும் பெற்றோர்களினதும் ஒத்தாசை மிக மிக அவசியமானதாகும் இதன் மூலமே கண்மூடித் தனமான தம் உணர்ச்சிகளின் அடிப்படைகளிலுமான வீண் போராட்டங்களில் இருந்து விலகி ஓர் சரியான நீதியான கோரிக்கைகளுக்கான தகமையை அவர்கள் மத்தியில் வளர்க்க முடியும்.

இவ்வடிப்படைகளிலான மாணவர் ஸ்தாபனங்கள் வளர்வது வரலாற்றின் இன்றைய தவிர்க்க முடியாத போக்கே. இதனைக் கண்டு மாணவர்களின் ஒழுக்கம், படிப்பு பற்றி கதறும் ஒழுக்க சீலர்கள் [illegible] மாணவர்கள் ஏன் சீரழிகின்றார்கள் என்பதற்கான ஓர் சரியான தெளிவைக் கொண்டிராதவர்களும், தங்கள் சுய நலத்தை மட்டும் கொண்ட சந்தர்ப்பவாத அறிவிலிகளே யாவார்.

எனவே மாணவர்கள் தம்மை சீரழிக்கும் உடனடிக் குப்பைக் கலாச்சாரங்களுக்கும் கல்வித் திட்டங்களுக்கும் எதிராக தமது பெரும் பங்களிப்பை செய்யக் கூடியதாக இருக்கும் வேளையில் பொறுப்புடன் குறுகிய கால கல்வி, வேலைவாய்ப்புக்களையும் கருத்திற் கொண்டு செயற்படுவதே பொருத்தமானதாகும். மாணவர்களால் மாத்திரமே முழுமையையும் அடைந்து விடலாம் என்ற தப்பான எண்ணம் அவர்கள் மத்தியில் வளர்வது தடுக்கப்பட வேண்டும்.

# ஒரு நிமிடம்

பத்திரிகை வெளியீட்டில் எமக்குள்ள சில பிரச்சனைகளை உங்களுடன் பகிருகின்றோம்.

என்றுமே இல்லாத வகையில் பத்திரிகைத் தாளின் விலை திடீர் என்று இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. ஏற்கனவே பல கஷ்டங்களின் மத்தியில் வெளிவந்து கொண்டிருக்கும் சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன இந்த அதிரடியால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. இதன் எதிரொலி பத்திரிகை விலையேற்றமாய் வாசகர்களை வந்து தாக்குகின்றது. இன்றைய தினசரிகளே தமது விலையை அதிகரித்துள்ள போது சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகளின் விலையேற்றம் தவிர்க்க முடியாததாய் உள்ளது. நாம் விலையேற்றத்தை ஏற்படுத்தாமலும் அதே நேரத்தில் எமது முதலீட்டிற்கு ஏற்பவும் பத்திரிகையை வெளியிட முயற்சி எடுத்துள்ளோம். இதனால் மாணவர் குரலின் நடுத்தாள் குறைக்கப்பட்டு அதற்காக விலையும் குறைக்கப்பட்டும் இவ் இதழ் வெளிவந்துள்ளது. எமது நிலையை புரிந்து கொண்டு இந்த தற்காலிக மாற்றத்தை பொறுப்பீர்களாக.

மேலும் இந்த பத்திரிகை வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள குழுவினர் தமது உடல், உள சக்திகளை சொந்த இலாபம் கருதாது செலவழித்து வருகின்றனர். பத்திரிகையின் ஆக்கங்கள், விளம்பரம், அச்சிடல், விற்பனை எல்லாமே இந்த சிறு குழுவின் உழைப்பு சக்தியால் நிகழுகின்றது. பத்திரிகையில் ஏற்படும் சொற்ப நட்டமும் சொந்த பணத்தால் ஈடுசெய்யப்படுகின்றது. இந்நிலையில் சில இடங்களில் பத்திரிகைகளை விற்பனை செய்ய பொறுப்பேற்கும் மாண

( 4-ம் பக்கம் பார்க்க )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சீரிய சிந்தனைகள் பிறக்கட்டும்

www.tamilarangam.net



# மாணவர்கள் சமூக பொருளாதார வளர்ச்சிகளுக்கு உழைப்பதற்குரிய பயிற்சியைப் பெறவேண்டும்

## பேராசிரியர் சண்முகதாஸ்

ஒன்றிணைந்த ஒரு மாணவர் அவை உருவாவது நல்ல விடயமே. அது எதற்காக உருவாக்கப்பட வேண்டும் என்பதே முக்கியமான கேள்வியாகும். இவ்விடத்திலேதான் தங்கள் கூற்றின் முரண்பாடு பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது. சமூக, பொருளாதார வளர்ச்சிகளிலே ஈடுபடுபவர்கள் எவ்வாறு அரசியலுக்கு அப்பாற்பட்டு நிற்கலாம். சமூக, பொருளாதார வளர்ச்சி பற்றி இன்று எம்முடைய நாட்டிலே அரசியலை விடுத்துப் பேச முடியுமோ? மாணவர்கள் சமூக, பொருளாதார வளர்ச்சிகளுக்கு உழைக்க வேண்டுமா அல்லது அவ்வாறு உழைப்பதற்குரிய பயிற்சிபெற வேண்டுமா? மாணவர்கள் பயிற்சி பெற வேண்டும் என்பதே எனது எண்ணம். அப்பயிற்சியினை அறிஞர்களிடமும் அனுபவசாலிகளிடமுமே பெறலாமொழிய வெறும்சாதாரண அரசியல் வாதிகளிடமல்ல என்பதை மாணவர்கள் உணர்ந்து கொண்டார்களேயெனின், அவர்கள் அத்தகைய அரசியற் சக்திக்குப் பலியாகவே மாட்டார்கள்.

நமது சமூக, பொருளாதார வளர்ச்சி அற்ப ஆசையும், சுயநலமுங் கலந்த வெறும் அரசியல் மாற்றத்தினுல் ஏற்பட்டு விடுவதில்லை என்பதை நாம் பல காலமாகக் கண்டு வந்துள்ளோம். அத்தகைய வளர்ச்சிக்கு உண்மை அறிவு, தன்னுட்டு தன்னின உணர்வு, மனித நேயம், பொதுநலம் ஆகிய பண்புகள் அவசியம். இத்தகைய பண்புகள் கொண்ட உழைப்பினை மேற்கொள்ள நல்ல பயிற்சியினை மாணவர்கள் பெறுதற்கு இம்மாணவர் அவை அயராது உழைத்தல் அவசியம். உண்மை எது போலி எது? நீண்ட நாள் நன்மை தருவது எது? என்பன பற்றியெல்லாம் நடு நின்று நோக்குதற்கு நல்ல பயிற்சியும், அப்பயிற்சியினுல் விளையும் அறிவும் அனுபவமுமே துணைபுரியும்.

வாகனத்தைச் செலுத்துதற்கு நல்ல பயிற்சி பெற்ற பின்னரே ஒரு சாரதி அவ்வாகனத்தைத் தன்னிச்சையாகச் செலுத்துதற்கு அனுமதிக்கப்படுகிருன். இல்லாவிடில் பிறருக்கு எத்தனை ஆபத்து நேரிடுமென்பதை நாம் கூற வேண்டுமா? இது போலவே அரசியல், சமூக, பொருளாதார யந்திரங்களை இயக்குதற்குரிய பயிற்சியினை முதலிற் பெற்ற பின்னரே அவற்றை இயக்குதல் நல்லது. இவ்வடிப்படையிலே மாணவர் அவை சிந்திக்குமாயின் அரசியலுக்கு அப்பாற்படுதல், அரசியற் சக்திகளுக்குப் பலியாகுதல் போன்ற விடயங்கள் அதற்கு பெரியனவாகத் தோன்ற மாட்டா.

எதற்கும் நமது பண்பாட்டினையும் நன்கு உணர்ந்து கொண்டோமென்றல், போலிகளையும் வேண்டாதவைகளையும் கண்டு நாம் ஏமாருமல், தனித்துவத்துடன் செயற்பட வழிவகுக்கும். இவ்விடயத்திலும் மாணவர் அவை நிச்சயமாகத் தன் கவனத்தைத் திருப்பும் என எண்ணுகிறேன்.

# சிந்தனைப் புரட்சி

பிரச்சாரங்களாலும், தற்காலிக சில முயற்சிகளாலும், சட்டத்தாலும் சமுதாயத்தில் காணப்படுகின்ற சாதி-சீதனம் போன்ற பாரிய ஒடுக்குமுறைகளைக் களைந்துவிடுவதென்பது முடியாத காரியம் என்பது தற்போது மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்தும் சாதிக்கும் சீதனத்திற்கும் எதிராகப் பிரச்சாரம் செய்வதென்பது ஒரு வீணை பிரயத்தனமாகும். இந்நிலையில் சாதியையும் சீதனத்தையும் முற்ருக அழித்தொழித்து புது சகாப்தம் படைக்க தாங்கள் என்ன வழியைக் கூறுகின்றீர்கள் என்று நாம் கேள்வியை எழுப்பி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டியபோது கிடைத்த பதில்கள்...

★ சாதியையும் சீதனத்தையும் ஒழிப்பதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனுல் இவற்றினுல் இன்று வரை எந்தவிதமான வெற்றியையும் காண முடியவில்லை. சட்டம் தோற்றுவிட்டது, மனமாற்றம் தோற்று விட்டது, பிரச்சாரம் தோற்றுவிட்டது.

இன்றைய முதலாளித்துவ அமைப்பில் சாதி அமைப்பையோ, சீதனத்தையோ அழிக்க முடியாது. முதலாளித்துவ அமைப்பில் பொருளாதார முறைகள், அரசியல் அமைப்புக்கள், கலாச்சாரப் பின்னணிகள் இவற்றிற்கு சார்பாகவே யுள்ளன. எனவே சாதி, சீதனத்தை ஒழிக்க வேண்டுமாயின் மேற்கூறப்பட்ட தற்கால அரசியல், கலாச்சார, பொருளாதார அமைப்பு முறைகள் மாற்றப்பட வேண்டும். இதனை மாற்ற வேண்டுமாயின் ஒரு சித்தாந்த அடிப்படையில் மக்கள் ஒன்றிணைந்து இத்தகைய அமைப்பை போராட்டத்தின் மூலம் மாற்றியமைத்தல் வேண்டும். இதன் மூலமே சீதனம், சாதி என்பன ஒழிக்கப்படும்.

செல்வன் தா. திருக்குமாரன்
க. பொ. த. உயர்தரம்
யாழ்/நெல்லியடி
ம. மகாவித்தியாலயம்

★ அணு யுகத்தில் உலகம் ஊசலாடுகின்றது. பொருளாதார ஏற்றம் காண விழைகின்றன பல நாடுகள். ஆனுல் நம்மினத்திலோ சாதி வெறி கோரத் தாண்டவமாடுகின்றது. சீதனப் பேய் மக்களை ஆட்டிப் படைக்கின்றது.

எத்தனையோ தாய்மார்கள் சீதனம் இல்லாமல் மணம் முடித்துவிட்டு இப்போ தங்கள் பிள்ளைகளுக்கு சீதனம் வாங்க துடிக்கின்றனர். தங்கள் மகனுக்கு வருகின்ற பெண்ணும் தன்னைப் போன்றவளே என்பதை மறந்து விடுகின்ருர்கள்.

மிருகங்கள் ஒன்றையொன்று வேட்டையாடுவதைப் போன்று சாதி - சீதனம் என்று மனிதர்கள் மனிதர்களையே வேட்டையாடுகின்றனர். இந்த நிலை கட்டாயமாக மாற்றப்பட வேண்டும். மாற்றியமைக்கக் கூடிய சக்தி மாணவர்களிடமே உண்டு என நான் நினைக்கின்றேன்.

S. சாந்தராணி
க. பொ. த. உயர்தரம்
இராமநாதன் கல்லூரி

★ சாதியையும் சீதனத்தையும் இந்த முதலாளித்துவ அமைப்பில் நீக்குவதென்பது ஒரு போதும் முடியாத காரியமாகும். சாதியை இந்த முதலாளித்துவ அமைப்பில் ஒழிக்கப் போவதாய் கூறி அரசியல் வாதிகள் நடாத்தும் சமபந்தி போசனங்களும், ஒரு மணிநேர நகர சுத்திகளும், சவரம் செய்தலும் வெறும் விளம்பர நோக்கம் கருதி செய்யப்படும் சுயநல நாடகமாகும். இவற்ருல் எல்லாம் சாதியை அழிக்க முடியாது.

சாதி, சீதனம் என்பன அழிக்கப்பட வேண்டுமாயின் இந்த முதலாளித்துவ அமைப்பு மாற்றப்பட வேண்டும். இதற்கான போராட்டம் மாணவர்களால் மட்டும் அன்றி பலதரப்பட்ட முற்போக்கு சக்திகளால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

M, கந்தராசா
க. பொ. த. உயர்தரம்
யாா/செங்குந்தா கல்லூரி

## மகாத்மாவின் புரட்சி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றிற்கு மேலாக தற்பாது காப்பிற்கு போராடுகையில் அகிம்சையைப் பற்றி யோசிக்காதே என்றும் மக்களுக்கு மகாத்மா கூறியுள்ளார். "ஒரு பெண் தாக்கப்படும் போது அவள் இம்சை, அகிம்சை என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. அப்போ அவள் முதற்கடமை தற்பாது காப்பே...! இயற்கை அவளுக்கு நகங்களும், பற்களும் அளித்திருக்கின்றன அவற்றை அவள் முடிந்த மட்டும் பயன்படுத்தட்டும்" என்று மகாத்மா காந்தி கூறி தற்காப்பின் போது அகிம்சையை கைவிட உபதேசிக்கின்ருர்.

காந்தியின் அகிம்சையை பிரச்சாரம் செய்யும் முதலாளித்துவ வாதிகளும், ஏடுகளும் மேற்கூறிய காந்தியின் கருத்துக்களை ஏன் மறைக்கின்றன? ஆயுதப் போராட்டத்தை காந்தி ஆதரித்தமையையும், தேவை ஏற்படின் அகிம்சையை கைவிடும்படி காந்தி கூறிய கருத்துக்களும் மக்கள் முன் செல்லக் கூடாது என்று திட்டமிடுகின்றனரா?

மாணவர்கள் - கல்வி என்பனவற்றைப் பற்றி காந்தி குறிப்பிடுகையில் புரட்சிக் கருத்துக்களை கூறியதுடன் முதலாளித்துவ கல்வியமைப்பை வன்மையாக சாடுகின்ருர்.

"பசிப்பிணி போக்க வழி இன்றி கோடான கோடி மக்கள் மடிந்து கொண்டிருக்கும் போது இவர்களின் துன்பத்தைப் பற்றி சிந்திக்கத் தூண்டாத, இவர்களின் பசிப்பிணியை போக்க வழி கற்பிக்காத கல்விமுறை எதற்காக?"— என்று கேள்வி எழுப்பி முதலாளித்துவ கல்வியமைப்பின் நிலையை சாடுகின்ருர். "கிராமத்தவர், டாக்டர் பட்டம் பெற்றவர் ஆகிய இருவரும் ஒரே தகுதியுடையவர் தான் என்பதை அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான திறன் இருக்கிறது. இருவரையும் ஒரு சேரப் பிணைக்க வேண்டும்" என்று காந்தி தனது கருத்தைக் கூறுகின்ருர்.

மாணவர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் "சமூக சீர்திருத்தத்தின் திறவுகோல்கள் மாணவர்களின் சட்டைப்பையில் இருக்கின்றது" என்றும் "அரசியல் மாணவருக்கு அவசியம் ஆனுல் கட்சி அரசியல் கூடாது" என்றும் "அடிமைத்தனையில் கல்வி பெறுவதை விட நாட்டின் விடுதலைக்காக கல்லுடைத்து கல்லா திருப்பது சாலச் சிறந்தது" என்றும் கூறியுள்ளார்.

காந்தீயத்தின் வழியில் செல்கின்ருேம் என்று கூறுபவாகள் காந்தி கூறிய இந்தக் கருத்துக்களை திட்டமிட்டு மறைப்பதுடன் மாணவர்களின் சமூக, அரசியல் பங்கை மறுத்து வருகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக புரட்சிக் கருத்துக்களின் உச்சக் கட்டமாய் "பொருளாதார சமத்துவம் தான் சுதந்திரத்தின் உயிர்நாடி" என்று கூறி மக்களின் உண்மையான சுதந்திரத்திற்கு, விடுதலைக்கு பொருளாதார சமத்துவமே அவசியம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். மாக்சிச சித்தாந்தத்தின் அடிப்படை கருவாகிய பொருளாதார சமத்துவத்தை காந்தி சுதந்திரத்தின் உயிர்நாடி என்று முகமன் கூறி வரவேற்ற பின் சுதந்திரத்தின் சாவி மாணவர்களின் கையில்தான் இருக்கின்றது" என்று கூறுகின்ருர். இதில் இருந்து பொருளாதார சமத்துவத்திற்கான புரட்சிப் போராட்டத்தை மாணவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்று காந்தி கூறுகின்றமையை நாம் உணர முடிகின்றது.

மாக்சிசத்தின் அடிப்படை வாதத்தை ஏற்று, இன்றைய முதலாளித்துவ கல்வியமைப்பை சாடி, மாணவர்கள் வகிக்க வேண்டிய பங்கை தெளிவுபடுத்திய மகாத்மா காந்தியின இப்புரட்சிக் கருத்துக்கள் மறைக்கப்பட்டுள்ளன. இந்த புரட்சிக் கருத்துக்களை மகாத்மா ஏற்றுக் கொண்டிருப்பதை அறியும் போது மகாத்மா இன்னும் சில காலம் உயிருடன் இருந்திருப்பாரேயானுல் மக்களின் பரிதாபமான நிலையையும், முதலாளித்துவ சுரண்டலையும் ஜனநாயக பாராளுமன்ற ஆட்சியில் பூரணமாய் கண்டு அனுபவித்த பின் இந்த அமைப்பிற் கெதிராக மக்களை தமது பாணியில் தூண்டி புரட்சிக்கு ஒரு வழி சமைத்திருப்பார் என்று நிச்சயப்படுத்தி கூற முடிகின்றது. ஆனுல் அப்படி ஒரு நிலை ஏற்பட விருந்ததை துப்பாக்கிக் குண்டுகள் தடுத்து விட்டமை வரலாற்றின் ஒரு கறையாகவே அமைகின்றது.

(காந்தீயத்தின் பெயரால் பிற்போக்கு வாதம் புரிவோர்க்கு இக்கட்டுரை சமர்ப்பணம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழகத்தில் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் கருத்துக்களும் பிரச்சாரமும் மேல்தட்டில் புயலை உண்டாக்கினவே தவிர, அடிப்படை

# சமுதாய மாற்றத்துக்கு வழி வகுக்கவில்லை

பெரியார் அவர்கள் ஐந்து நோய்களைக் குறிப்பிட்டு அவற்றிற் கெதிரான பிரச்சாரத்தை செய்தார். அவர் குறிப்பிடும் நோய்களில் முதல் நோய் பார்ப்பனியமாகும்.

ஈவேரா பார்ப்பனியத்தை சாதி, கடவுள், கோவில், ஆரியன், வேதங்கள், புராணங்கள் முதலியனவற்றுடன் இணைத்துக் கூறுகின்றார்.

சாதிய முறைகளை உண்டாக்கி வர்ணாசிரம தர்மங்களை வகுத்து சாதிப் பாகுபாடுகளையும், இழிவுகளையும் உண்டாக்கியது பார்ப்பனியம். எனவே சாதி முறைகளை எதிர்க்க வர்ணாசிரம தர்ம நீதிகளை ஒழிக்க, சாதியப் பாகுபாடுகளையும் இழிவுகளையும் ஒழிக்க பார்ப்பனீயத்தை ஒழிக்க வேண்டும். (கடவுளை உண்டாக்கி கோவிலை கட்டி அதில் பார்ப்பான் உட்கார்ந்து கொண்டு மற்றவர்களை மயக்கி மடையனாக்கி தான் மேலே உட்கார்ந்து கொண்டு ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றான் என்று ஈ.வே.ரா குறிப்பிட்டார்)

பெரியார் ஈ.வே.ரா. தனது எழுத்திலும் பேச்சிலும் பிரச்சாரத்திலும் பார்ப்பனீயத்தை வலுவாகச் சாடியுள்ளார். அவரைத் தொடர்ந்து திரு. அண்ணாத்துரை அவர்களும் பார்ப்பனர் சூழ்ச்சிகளைப் பற்றியும் ஆரிய மாயை பற்றியும், புராண இதிகாசப் பொய் புரட்டுக்களைப் பற்றியும் எழுதியும் பேசியும் வந்தார்.

அடுத்து ஈ.வே.ரா. அவர்கள் குறிப்பிட்ட இரண்டாவது நோய் பத்திரிகையாகும். இன்று இந்த பத்திரிகைகள் எல்லாம் பெரும்பாலும் முதலாளித்துவ அமைப்பையும், சுரண்டலையும் பாதுகாத்து நிற்கின்றன. பெரிய பத்திரிகைகள் அரசாங்கத்தின் தயவிலும், விளம்பரம் மூலமான வருமானத்திற்கு பெரிய முதலாளிகளின் தயவிலும் தான் நடைபெறுகின்றன. இவ்வளவு பெரிய பகாசுரப் பத்திரிகைகளுக்கு முன்னால் ஏதோ ஒரு கொள்கைக்காக உள்ள ஒரு பத்திரிகை நிலைத்து நிற்பது கடினமாகும்.

பெரியார் ஈ. வே. ரா.வின் கொள்கைகளை குறிப்பாக கடவுள் எதிர்ப்பு, மத எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு முதலிய எதையும் அன்றைய பத்திரிகைகள் எவையும் ஆதரிக்கவில்லை. மலிவான சரக்குகளை விற்றுக் கொண்டிருந்த பத்திரிகைகள் அந்தக் கொள்கைகளுக் கெதிராக பலவிதமான விஷமப் பிரச்சாரங்கள் செய்தன.

இன்றும் பல பத்திரிகைகள் பல பொய்ப் பிரசாரங்களைச் செய்தும். தவறான செய்திகளைப் பரப்பியும், மக்களை திசை திருப்புகின்றன. இன்றைய முதலாளித்துவ அமைப்பில் பத்திரிகைகள் சுரண்டல் கூட்டங்களின் கருவிகளாகவும், வியாபாரப் பொருளாகவும் ஆகிவிட்ட காரணத்தால் அது சமுதாயத்தைப் பீடித்த வியாதி ஆகிவிட்டது.

நல்ல சக்திகள் ஒரு வீறுடன் இலட்சியப் பிடிப்புடன் புதிய ஒரு சரியான திட்டத்துடன் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ் மக்கள் வளர்ச்சிக்கும் முன் வருமாயின் இந்த நோயை எதிர்த்து சரியாகப் போராடலாம்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் குறிப்பிடும் மூன்றாவது பெரு நோய் அரசியல் கட்சிகள். இன்றும் அரசியல் கட்சிகள் எல்லா விதமான அலங்கோலங்களுக்கும் ஆளாகியுள்ளன. ஒவ்வொரு அரசியல் கட்சியும் சகல விதமான முதலாளித்துவ சீரழிவுகளையும் வெளிப்படுத்துகின்றன.

முதலாளித்துவ அமைப்பின் அடிப்படை நோக்கம் இலாபம். எப்படியும் இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்னும் நோக்கம் வலுவடைகிறது. இலேசான தொழில் செய்து அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்பது குறிக்கோளாகி விடுகின்றது. அதில் இருந்து அரசியலும் எழுந்திருக்கின்றது.

பொது வாழ்வில் சுயநல அரசியல் கலந்து விடுவதால் அதுவே சமுதாயத்தைப் பீடித்த ஒரு தொத்து நோயாகி விட்டது. இதை பெரியார் ஈ வே. ரா. சாடினார். ஆனால் அதற்கான மூல காரணம் என்ன? அதைப் போக்குவதற்கு வழியென்ன? என்பதைப் பற்றி அவர் ஆராயவில்லை. விளக்கிக் கூறவில்லை.

பெரியார் ஈ. வே. ரா. குறிப்பிட்டுள்ள நான்காவது நோய் சட்டசபை. இது அரசியல் கட்சிகள் என்னும் நோயுடன் சம்பந்தப்பட்டது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். சட்டசபை என்பது ஒரு சந்தைக் கடையைப் போல இருக்கின்றது என்பதை பல அறிஞர்களும் ஒப்புக் கொள்வார்கள்.

சட்டசபைக்குப் போவதற்கு அரசியற் கட்சி ஆதரவு வேண்டும். ஓட்டுக் கேட்டு கண்டவர்களுக்கெல்லாம் கும்பிடு போட வேண்டும். ஓட்டு வாங்குவதற்குப் பல பொய்களையும் வாக்குறுதிகளையும் கூற வேண்டும். எப்படியும் ஜெயிக்க வேண்டும் என்னும் நிலை ஏற்படும் போது பணம் செலவு செய்ய வேண்டும். எந்த தில்லுமுல்லும் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

''ஓட்டு வாங்கிப் பிழைக்க எண்ணுபவன் எதற்காக சாதி, கடவுள், மதம் என்று கேட்கத் துணிய மாட்டானே'' – என்று பெரியார் குறிப்பிடுகிறார்.

முதலாளித்துவ அமைப்பில் சட்டசபைகள், பாராளு மன்றங்கள் முதலியவை யெல்லாம் முதலாளித்துவ சுரண்டலின் நிர்வாகக் கருவிகளாக இருக்கின்றன, சட்டசபைக்கு போக வேண்டும் என்ற எண்ணம் வந்தவுடனேயே எல்லா விதமான நோய்களும் பிடித்துக் கொள்கின்றது என்பதை பெரியார் கூறி கடுமையாக சாடியுள்ளார்.

பெரியார் குறிப்பிட்ட ஐந்தாவது பெருநோய் சினிமா. இந்த சினிமா என்னும் தொழு நோய் எவ்வாறு பெருநோயாகப் பரவி படர்ந்திருக்கின்றது என்பதைப் பெரியார் ஈ. வே. ரா. கடுமையாகச் சாடினார். இன்றைய சினிமா வெறும் ஆரவாரம், வாய்ச்சவடால், பொய் பித்தலாட்டம், அடிதடி, கத்திச் சண்டை, குத்துவெட்டு, அரை நிர்வாண ஆட்டம், ஆண்களும் பெண்களும் கும்மாளம் போடுதல், திடீர்க் காதல், ஜோடிப் பாட்டு, வில்லன் தோற்றம், கற்பழிப்பு முயற்சி, கதாநாயகன் காப்பாற்றுதல், களியாட்டம், கீழ்த்தரமான உணர்வுகளை கிளப்பி விடுவது இப்படிப்பட்ட இழிவான பிரச்சார முறை முதலாளித்துவ சீரழிவை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டுவதாக இருக்கின்றது. இந்தப் போக்கைக் கண்டுதான் பெரியார் ஈ. வே. ரா. சினிமாவை சாடினார்.

பெரியார் அவர்களின் கொள்கைகள், அவர் கையாண்ட சில வழிவகைகள் என்பனவற்றில் பலருக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம் ஆனால் அவர் கிளப்பிய பிரச்சனைகள் தமிழ் சமுதாயத்தை மிகவும் வலுவாகப் பாதித்துக் கொண்டிருந்தவையாகும், அவைகளை தீர்க்கும் வகையறிந்து பல ஆரோக்கியமான சக்திகளையும் இணைத்துக் கொண்டு ஒரு பெரிய வரலாற்றுக் கடமையைச் செய்ய வேண்டிய பணி காத்திருக்கின்றது. (தமிழகத்தில் மட்டுமன்றி நமது நாட்டிலும்) அதை செய்வது ஒரு கடினமான வேலை ஆயினும் அதை செய்ய வேண்டியது அவசியமாகும்.

(குறிப்பு:- நமது நாட்டைப் பொறுத்த வரை பார்ப்பனியர்கள் என்று கருதப்படுபவர்கள் அடக்கு முறைகளை பிரயோகிப்பவர்களாகவும், சுரண்டும் வர்க்கமாகவும், பெரும்பாலும் இல்லை — என்பதை கருத்திற் கொள்க. - ஆ.ர்)

★

## விடுதலை இயக்கங்கள் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்க வேண்டும்·

ஓர் நாட்டில் அரசியல் விடுதலை இயக்கங்கள் பூரண வெற்றியுடன் நடைபெற வேண்டுமாயின் அவ் அரசியல் விடுதலை இயக்கத்திற்கு ஓர் திடகாத்திரமான அத்திவாரம் வேண்டும். இதுவே விடுதலை கோரும் நாட்டின் பொருளாதாரம் எனப்படும். ஓர் மறைமுக அரசியல் பந்தோபஸ்திடும் அவ் விடுதலை இயக்கத்தினுடைய தேசிய தேறிய வருமானம் ஆனது அதை இலாபகரமாக அமைத்தால் தான் இவ் விடுதலை இயக்கத்தை வெற்றிப் பாதையில் முன் செலுத்திச் செல்ல முடியும். இதன் மூலமே விடுதலை இயக்கத்தின் வீரர்களுக்கு உணவு கொடுக்கவோ, விடுதலைக்குத் தேவையான முக்கியமான மூலகாரணப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து தருவிக்கவோ, அன்றேல் விடுதலை இயக்கத்தில் வீரர்களை பயிற்றுவிக்கவோ முடியும்,

மேலும் அவ் விடுதலை இயக்கத்தால் விடுதலை அடையச் செய்யும் நாட்டை மீண்டும் காப்பாற்றக்கூடிய பலம் இருத்தல் வேண்டும். இப்பலம் அந்த விடுதலை அடைந்த நாட்டின் மக்களின் தொகையில் தங்கியிருந்தாலும் பொருளாதாரப் பெருக்கத்திலேயே இது கூடுதலாகத் தங்கியுள்ளது. அந்நாட்டில் பணவீக்கம் ஏற்படுமாயின் அதை ஈடுசெய்ய மீண்டும் அந்நாட்டை உற்பத்திக்கு அடிமை ஆக்க வேண்டி ஏற்படுகின்றது. இவற்றில் இருந்தும் அந்நாட்டை பாதுகாக்க அந்நாட்டின் அரணாக பொருளாதாரமானது பின்னிப் பிணைந்து அரசியல் இயக்கத்தை வழிநடத்திச் செல்லுமாயின் போராடிப் பெறப்படும் சுதந்திர நாட்டை அந்நாட்டின் விடுதலை வீரர்களால் அச்சமின்றி பாதுகாக்க முடியும். இல்லையேல் போராடி அந்த சுதந்திரத்தைப் பெற்றதில் எவ்வித அர்த்தமும் இல்லாமல் போய்விடும்.

செல்வி S. செல்வராணி
உடுவில் மகளிர் கல்லூரி

## அடுத்த இதழில்

எழுதுகின்றார் ஸ்கந்தவரோதய கல்லூரி க. பொ. த. உயர் (கலை) வகுப்பு மாணவியான

செல்வி எஸ். கண்ணகி

## வட்டமேசை

★ மாணவர்கள் பலர் எழுதக்கூடிய வன்மை படைத்தும் இலைமறைக் காய்போல் இருக்கின்றார்கள். உங்கள் பத்திரிகை மூலம் சிறந்த எழுத்தாளர்கள் உருவாக இடமுண்டு.

R. கொன்சன்டைன்
பரியோவான் கல்லூரி

★ ''மாணவர் குரல்'' கண்டோம். இதில் மாணவர்களுக்குப் பயனுள்ள நல்ல கதைகளையும் சேர்க்க வேண்டுகிறோம். இளம் மாணவர்கள் இதை வரவேற்பார்கள்.

த. ராஜரஞ்சினி
7A, உடுவில் மகளிர் கல்லூரி

★ சென்ற இதழில் ''மாணவர் குரலில்'' இடம்பெற்ற கலாநிதி க. கைலாசபதி அவர்களின் கட்டுரை வளரும் மாணவ சமுதாயத்திற்கு வரப்பிரசாதமாகும், முக்கோணம் என்ற அம்சமும் நன்றாக இருந்தது. ''மாணவர் குரலின்'' வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

உஷா. மயில்வாகனம்
க. பொ. த. உயர்(கலை)
ஸ்கந்தரோதயக் கல்லூரி

★ மாணவ உலகின் தூய்மையை பாதுகாத்து, நன்னெறிப் படுத்தும் நோக்கத்துடன் ''மாணவர் குரல்'' வெளிவந்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் இத்தகையதொரு ஏடு வெளிவந்திருப்பது வரவேற்க வேண்டிய தொன்றாகும். மாணவர்களுக்குப் பல பயனுள்ள விடயங்களை வழங்குவதோடு மாணவர்களை எழுதவும் இது தூண்டுகின்றது.

ஈழநாடு
வாரமலர்

★ வாடுகின்ற பயிருக்கு வான்மழை பெய்தால் போல மாணவ சமுதாயத்திற்கு ''மாணவர் குரல்'' பத்திரிகை பெரும் பணி செய்கின்றது மேலும் மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

க. மஹேந்திரநாயகம்
முத்துத்தம்பி
மகாவித்தியாலயம்

## கவியரங்கு

தஞ்சம் இல்லையெனக்
கஞ்சிக் கலயம் தாங்கி
நஞ்சுச் சமுதாயத்தில்
நலிந்து நடைப்பிணமாய்
கஞ்சிக்குத் தெருவாய்
அலைந்து சாய்ந்து
தரை வீழ்ந்து விட்டான்
அஞ்சாதே என்றருள்வான்
என்றாரே — அந்த
ஆண்டவனும் தான்
செத்தானோ?

க. ஜெயக்குமார்
க பொ. த. (உயர்)
இராமகிருஸ்ண
மகாவித்தியாலயம்

## முடியுமானல்

## சிரியுங்கள்

ஆசிரியர்:-
ராஜ் எப்படி சோதனை?
என்ன ரிசல்ஸ் வரும்?
ராஜ்:-
ரவியின்ரிசல்ஸ் என்னவோ
அதுதான் சார் எனக்கும் வரும்.
ஆசிரியர்:-
ஏன் அப்படி சொல்கின்றாய்.
ராஜ்:-
ரவி எனக்கு முன்னாலதான்
இருந்தவன் சார்.

K. A.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகாத்மாவின் புரட்சிக் கருத்துக்கள் மறைக்கப்பட்டுவிட்டன.

## சமூக சீர்திருத்தத்தின் திறவுகோல்கள் மாணவர்களின் சட்டைப்பையில் இருக்கின்றது — மகாத்மா காந்தி

மகாத்மா காந்தியடிகள் இன்றைய சமுதாய அமைப்பினை வலுவாகச் சாடியுள்ளார். அவர் கூறிய புரட்சிக் கருத்துக்கள் எல்லாம் திட்டமிட்டோ அன்றில் வேறு காரணங்களாலோ மக்கள் முன் மறைக்கப்பட்டு, காந்தீயத்தின் போர்வையில் வெறும் அகிம்சை மட்டும் தூக்கிப் பிடிக்கப்படுகின்றது. இதன் மூலம் புரட்சிக் கருத்துக்கள் பரவுகின்ற ஒரு வாய்ப்புத் தடைப்பட்டு நிற்கின்றது.

மணியம் - சிவகுமாரன்

அகிம்சையைப் பற்றி காந்தி குறிப்பிடுகையில் ''அகிம்சை என்றால் தீமைக்கு எதிராகப் போராடாமல் இருப்பது என்று பொருள் இல்லை'' என்று கூறுகின்றார். மேலும் ''கோழைத்தனத்தைக் கைக்கொள்ளுவதா? இம்சையைக் கைக்கொள்வதா? என்ற நிலை ஏற்படும் போது, இம்சையைக் கைக்கொள்ளும்படியே நான் அறிவுரை கூறுவேன். நாட்டிற்கு ஏற்படும் அகௌரவத்தை கோழைத்தனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதை விட ஆயுதம் தாங்கி போரிடுவதை நான் ஆதரிக்கின்றேன்'' என்று கூறியுள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

# ஒரு விமர்சனம்

...மூட நம்பிக்கையின் பால் பட்ட விடயங்களை ஆதாரங்கள் இன்றி, பலபக்க ஆதார பூர்வ நிரூபித்தல் இன்றி தூக்கி எறிவதும், தூக்கி எறியக் கோருவதும் தவறானதாகும். ஆவியுலகம் பற்றிய கட்டுரையில் மூட நம்பிக்கையை கண்மூடித்தனமாய் தூக்கியெறியாமல் அதனை ஆராய்ந்து பார்க்க முற்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. ...... கட்டுரையாளர் அகால மரணமடைபவர்களை கட்டுரையின் பொருளாக எடுத்து உயிர் என்பது இறந்த மனிதனின் சிந்தனைகள், நினைவுகள் இலட்சியங்களை கொண்டுள்ள ஒரு கரு என்ற கருதுகோளுக்கு வருகின்றார். இந்த ஊகத்திற்கு அவர் வர எடுத்துக் கொண்ட விஞ்ஞான பூர்வமான ஆதாரம் வெற்றுக் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்ட எலியாகும். யுகக் கணக்காக நிலவிவரும் ஒரு பிரச்சனைக்கு ஒரு சிறு பரிசோதனை போதுமா?

... கட்டுரையாளரை அகால மரணமடைந்தவர்களின் உயிர் சம்பந்தமான பிரச்சனையை ஆராயத் தூண்டியது பல்வேறு பத்திரிகைகள் மூலம் வெளிவந்த சில தகவல்களாகும். இத்தகவல்கள் பற்றி முதலில் ஆராய்ந்து, அதில் இருந்து பெறப்படும் முடிவுகளை வைத்துக் கொண்டு இவ்வாராய்வை செய்வது அவசியம். இது ஆராயப்பட வேண்டும் என்ற பார்வை பாராட்டப்பட வேண்டியது. ஆனால் ஆராய்ந்த முறை தவறாகும்.

பறக்கும் தட்டுக்கள் என்ற கட்டுரை எழுதியவரின் பெயர் இன்றி வந்தது தவறு. ஆராய்வுக் கட்டுரைகளுக்கு அவ் ஆராய்வை நடாத்தியவர்களே பொறுப்பாளிகளாகும். (பத்திரிகை ஆசிரியர் இவ்விதமான கட்டுரைகளுக்கு உரிமை கொண்டாட முடியாது) இக் கட்டுரை சம்பந்தமான பிரச்சனைக்கு சில கேள்விகளை விமர்சனமாக முன் வைக்கின்றேன்.

★ என்னவென்று கண்டுபிடிக்க முடியாது போன ''போர்ட்நக்ஸ்'' கோட்டைக்கு மேல் பறந்த ஒளிப்பிளம்பும், 1948லும், 1950இலும் விமான மோட்டிகளால் காணப்பட்ட ஒளிப்பிளம்புகளும் ஒன்றுதான் அல்லது ஒரே மாதிரியானவை என்பதற்கு ஆதாரம் உண்டா?

★ என்ன வென்று கண்டு பிடிக்க முடியாது போன பொருளை குறிப்பிட்ட குணதிசயங்களை கொண்ட பறக்கும் தட்டு என்று முடிவெடுத்திட முடியுமா?

★ உடைந்து நொறுங்கி இருந்த துண்டுகளும், இறந்து கிடந்த குள்ள மனிதர்களும் பறக்கும் தட்டு மர்மத்தை துலக்க பெரும் ஆதாரம் அல்லவா?

★ கண்களின் ஊடே சொல்வது என்பது என்ன? வேறு உலக மனிதர்களுக்கு அது தெரியும் என வைப்போம். நம் உலக மனிதர்கள் கண்களின் ஊடே பதில் அளித்தார்களே அந்த வித்தையை எப்போது கற்றார்கள்?

- லோகன் -

### ஒரு நிமிடம் —

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களும் மாணவர் அல்லாதோரும் தமது பொறுப்புணர்ச்சியை உணர்ந்து கொள்ளாமல் இருப்பதால் மேலதிகநட்டமும் எம்மை தாக்குகின்றது. ஏற்ற பொறுப்பை பொறுப்புணர்ச்சியுடன் செய்து முடிக்க வேறு கஸ்டங்களை உடையவர்கள் பொறுப்பை ஏற்க முன்வராதீர் என வேண்டுகிறோம்.

மேலும் மாணவர் குரலினை தொடர்ந்து நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினால் இடையில் உள்ள தொடர்புகளை விடுத்து நேரடியாக சந்தாதாரராய் சேர்ந்து கொள்வது அவசியம் என்பதை வலியுறுத்துகிறோம்.

- பத்திரிகைக் குழு -

### தமிழ் மாணவர்களே! மக்களே! உசார்! உசார்!

முழுத் தமிழ் மாணவர்களையும் மக்களையும் இழிவு படுத்தும் வகையில் அண்மையில் ஒரு அரசியற் கட்சி பொதுக் கூட்டத்தில் பாராளுமன்ற கட்சி அரசியல் வாதிகள் வாந்தி எடுத்துள்ளனர். குதிரையோடியே தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனராம்; யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் மரமண்டைகளாம்; பிணம் தின்னிகளாம். எப்படி இருக்கின்றது கதை? இதுமட்டுமல்ல பேராசிரியர்களை வேறு பொதுமக்கள் முன் கேவலமான வார்த்தைகளால் தாக்கியுள்ளனர்.

ஸ்ரீ லங்கா பாராளுமன்றத்தில் சில காலத்திற்கு முன் தமிழ் மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் எதிராக கிளப்பப்பட்ட இனத்துவேச கருத்திற்கு இவர்கள் இன்று முண்டு கொடுத்துள்ளனர். ஆஹோ! இவர்கள் அல்லவா இன விடுதலை வீரர்கள்.

பல்கலைக்கழக மாணவர்கள் சமுதாயத்தில் தமக்குள்ள பங்களிப்பை புரிந்து கொண்டு அபிவிருத்தி சபை சட்ட மூலத்தை பற்றி விவாதிக்க அழைத்த நியாயமான அழைப்பை ஏற்கத் திராணியற்று ஓடி ஒழித்து நின்று ஊளையிடுகின்றனர் இந்த பதவி வெறியர்கள் இன்று தமிழ் மாணவர்களையும், பேராசிரியர்களையும் கேவலமாய் தாக்கி இனவாத அரசியல் வாதிகளுக்கு ஆதாவாய் முண்டு கொடுப்பவர்கள் நாளை விடுதலைப் போராளிகளையும் காட்டிக் கொடுப்பார்களா? எனறு சிந்திப்பது நியாயமானதே. எனவே தமிழ் மாணவர்களே! மக்களே! உசார்! உசார்! நீங்கள் தூங்கிவிட்டால் பாராளுமன்ற அரசியல் வாதிகள் உங்கள் தலையையும் அறுத்து விற்றுவிடுவார்கள்.

### நமது பார்வையில்

மாணவர் அமைப்பு ஒன்று (சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக) உருவாக்க விரும்பும் வடக்கு, கிழக்கு, மலையகம் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள் பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ள கோரப்படுகின்றனர். எந்த அரசியல் அணியை சேர்ந்தவர் என்பது தேவையில்லை.

T. ஸ்ரீதரன்
''மாணவர் குரல்''
உரும்பராய்


**MASTER INSTITUTES**

*B. M. C. Lane, Jaffna*

G. C. E. AL விஞ்ஞானம்
G. C. E. AL வர்த்தகம்

*I. C. M. A.* (திரு. கருணாநிதி)

மாலை நேர, பகல் நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.



மக்கள் இன்று விரும்பி நாடும் தரத்தில்

உயர்ந்த சிக்கனத்தில் சிறந்த சோப்

**சன்லிட்டா சோப்**

சிவா தொழிலகம்

உரும்பராய்



ஏப்பிரல் மாதம் நடைபெற இருக்கும் லண்டன் பிற்மன் பரீட்சைக்குரிய புதிய வகுப்புகள் 10-10-80 வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

பரீட்சைக்குரிய பாடங்கள்:
SHORTHAND, TYPEWRITING, BOOK-KEEPING

இத்துடன் I. A. B. வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி கவனம் எடுக்கப்படும்.

**SRI MEENAKSHII**

*Commercial College*

*38, Seenivasagam Road,*
*Koddady.*


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 4/1, ஸ்ரான்லி வீதியிலுள்ள நொதேர்ன் அச்சகத்தில் அச்சிட்டு,
உரும்பராயைச் சேர்ந்த மணியம் - சிவகுமாரன் அவர்களால் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்